# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 049/நகராட்சி/2019**
**நாள் : 03/05/2019**

**திரு N.G. சீத்தாராமன்,**
**சென்னை – 59.** – **முறையீட்டு மனுதாரர்**

**திரு S. செல்வராஜ்,**
**நகராட்சி வருவாய் உதவியாளர் (ஓய்வு),**
**தாம்பரம் நகராட்சி.** – **எதிர் மனுதாரர்**

காஞ்சிபுரம் மாவட்டம், கிழக்குத் தாம்பரம், கணபதி காலனி, 19/23 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு N.G. சீத்தாராமன் அவர்களின் 20.03.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 49/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு சம்பந்தமாக, மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

காஞ்சிபுரம் மாவட்டம், கிழக்குத் தாம்பரம், கணபதி காலனி, 19/23 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு N.G. சீத்தாராமன் என்பவர், சேலையூர் கிராமம், படையாச்சி தெரு, புல எண்.146/7–இல் உள்ள 2200 சதுர அடி நிலம் தனக்குப் பாத்தியப்பட்டது என அசல் வழக்கு எண்.222/2014–இல் தாம்பரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில், மேற்குறிப்பிட்ட நிலத்திற்கு, 56292 எண்ணுள்ள வரி விதிப்பு திருமதி மு. விஜயா பெயரில் தாக்கலாகி உள்ளது என்றும், முறைகேடாக வரி விதிப்பு செய்வதற்குக் காரணமாக இருந்த வரித்தண்டலர் திரு S.செல்வராஜ் மீது நடவடிக்கை மேற்கொள்ளக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரிடம் 24.04.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. தனக்குப் பாத்தியப்பட்ட சொத்தில், எந்தவகையிலும் சம்பந்தம் இல்லாத திருமதி விஜயா என்பவர் பெயரில் சொத்துவரி விதிக்கப்பட்டதால், அச்சொத்தின் மீது அவர் உரிமை கொண்டாட ஆரம்பித்து விட்டார் என்றும், அதனால் தாம்பரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தனக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதென்று விசாரணையின்போது முறையீட்டு மனுதாரர் தெரிவித்தார். எந்தவித

ஆதார ஆவணங்களும் இல்லாத நிலையில் சம்பந்தப்பட்ட நிலத்திற்கு திருமதி விஜயா பெயரில் சொத்துவரி விதிப்பு செய்த நகராட்சி வரித்தண்டலர் திரு S.செல்வராஜ் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் விசாரணையின்போது கேட்டுக்கொண்டார். மேலும், தவறாக திருமதி விஜயா பெயரில் தாக்கல் செய்யப்பட்ட சொத்துவரி விதிப்பு இரத்து செய்யப்பட்டுள்ளது என்ற விவரமும் தனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் விசாரணையின் போது குறிப்பிட்டார்.

3. எதிர்மனுதாரரான ஓய்வு பெற்ற வருவாய் உதவியாளர் திரு S. செல்வராஜ் அவர்களிடமும் 24.04.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. திருமதி விஜயா என்பவர் நகராட்சி அலுவலகத்திற்கு வருகை தந்து சம்பந்தப்பட்ட சொத்திற்கு வரிவிதிப்பு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டதால் கள ஆய்வு செய்து, வாக்காளர் அட்டை, ஆதார் அட்டை மற்றும் அவரது தந்தையாரின் இறப்புச் சான்றிதழ் ஆகிய ஆவணங்களின் அடிப்படையில் 56292 எண்ணிட்ட சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டது என விசாரணையின்போது தெரிவித்தார். எனினும், எந்தவித ஆவணங்களும் இல்லாத நிலையில் மேற்குறிப்பிட்ட சொத்துவரி விதிப்பு 10.09.2015 நாளிட்ட அறிவிப்பில் இரத்து செய்து மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்ட விவரத்தினையும் குறிப்பிட்டார்.

4. இந்நேர்வில், 2014–15–ஆம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டிற்கு, தாம்பரம் (கிழக்கு), சேலையூர், 5, ராமசாமி படையாச்சித் தெரு முகவரியில் உள்ள சொத்திற்கு 56292 எண்ணிட்ட சொத்துவரி விதிப்பு திருமதி விஜயா பெயரில் தாக்கல் செய்யப்பட்டு 03.12.2014 நாளிட்ட சொத்துவரி விதிப்பு இரசீது வழங்கப்பட்டுள்ளது. மேலும், இச்சொத்துவரி விதிப்பு, திருமதி விஜயாவின் தந்தையார் காலம் சென்ற திரு பாபுவின் இறப்புச் சான்றிதழ், திருமதி விஜயா அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆதார் அட்டை மற்றும் வாக்காளர் அடையாள அட்டை ஆகிய ஆவணங்களின் அடிப்படையிலேயே செய்யப்பட்டதென விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட ஆவணங்களைத் தவிர வேறு நில சம்பந்தப்பட்ட ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. சொத்துவரி விதிக்கப்பட்ட நிலத்தில் கட்டுமானங்கள் உள்ளதா அல்லது வெறும் காலிமனையாக உள்ளதா என்றும் தெரிவிக்கப்படவில்லை. காலி மனையாக இருந்தால் 20.08.2009 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு ஆணை எண்.151–இன் படி காலிமனை வரி விதிக்கப்பட்டிருக்க வேண்டும். அந்நிலத்தில் கட்டுமானங்கள் இருந்தால் அக்கட்டடத்திற்கான கட்டட அனுமதியை கருத்தில் கொண்டு கட்டுமானப் பரப்பு மற்றும் கட்டடத்தின் தன்மைக்கேற்பவும் மற்றும் உரிமையாளர் குறித்து பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் அடிப்படையிலும் சொத்து வரி விதிக்கப் பட்டிருக்கவேண்டும். எந்தவொரு சட்ட விதிமுறைகளையும் பின்பற்றாமலும், தேவையான நில சம்பந்தப்பட்ட ஆதார ஆவணங்களின்றியும் மனை நிலத்திற்கு சம்பந்தமில்லாத நபர் பெயரில் சொத்துவரி விதிப்பு செய்ததால், முறையீட்டு மனுதாரர் நிலத்தின் மீதான தனது உரிமையை நிலை நாட்டிக் கொள்ள நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய அவசியத்தை நகராட்சி அலுவலர்கள் ஏற்படுத்தியுள்ளனர். மேலும், நகராட்சி அலுவலர்கள் சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டு மனுதாரருக்கு இன்னல்களை ஏற்படுத்தியுள்ளதுடன் மன உளைச்சலுக்கும் ஆளாக்கியுள்ளனர்.

5. இந்நேர்வின் எதிர்மனுதாரரான நகராட்சி வருவாய் உதவியாளர் பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டதாக அறிய முடிகிறது. எனினும், இந்நேர்வு சம்பந்தப்பட்ட சொத்திற்கு சொத்து வரிவிதிப்பு உரிய ஆவணங்களின்றி சொத்துக்கு சம்பந்தப்படாத நபர் பெயரில் சொத்துவரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும் விசாரணை மூலம் அறியமுடிகிறது. எனவே, பணி ஓய்வு பெற்ற நிலையிலும், எதிர்மனுதாரரான திரு S. செல்வராஜ் மீது நகராட்சி ஓய்வூதிய விதிகளின் படி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும்,

முறைகேடாக சொத்துவரி விதிப்பு செய்ததை கண்டறியத் தவறிய வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் அலுவலர் ஆகியோர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ளவும் தாம்பரம் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் ஆகியோருக்கு ஆணையிடப்படுகிறது. மேலும், திருமதி எம். விஜயா பெயரில் உள்ள சொத்துவரி விதிப்பு எண்.009/56292 நகராட்சி கணினி கேட்பு பதிவேட்டிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனத் தெரிவிக்கப் பட்டுள்ளதே தவிர முழுவதுமாக அச்சொத்து வரிவிதிப்பு இரத்து செய்யப்படவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, இந்நேர்வு சம்பந்தப்பட்ட சொத்து குறித்த நீதிமன்றத் தீர்ப்பு மற்றும் அந்நிலம் சம்பந்தப்பட்ட பதிவு ஆவணங்கள் மற்றும் வருவாய் துறையின் ஆவணங்களின் அடிப்படையில் அந்நில சம்பந்தப்பட்ட உரிமையாளருக்கு உரிய வரி விதிப்புகள் உரிய நடைமுறைகளின்படி விதிக்க அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த விவரத்தினையும் ஒரு மாத காலத்திற்குள் அறிக்கையாக சமர்ப்பிக்கும்படி தாம்பரம் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு, மே திங்கள், 3–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணை வழங்கப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு N.G. சீத்தாராமன்,
   19/23, கணபதி காலனி,
   கிழக்கு தாம்பரம்,
   சென்னை – 59.

2. திரு S. செல்வராஜ்,
   நகராட்சி வருவாய் உதவியாளர் (ஓய்வு),
   தாம்பரம் நகராட்சி,
   (நகராட்சி ஆணையர் மூலமாக).

3. நகராட்சி நிர்வாக ஆணையர்,
   இராஜா அண்ணாமலைபுரம்,
   எம். ஆர். சி. நகர், சென்னை – 28.

4. நகராட்சி ஆணையர்,
   தாம்பரம் நகராட்சி,
   தாம்பரம், சென்னை – 600 045.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி